# தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை
# தடையின்மைச்சான்று

விருகம்பாக்கம் -தீயணைப்பு-மீட்புப்பணி நிலையம்.

த.இ.சா.எண்: 56 / 2022 நாள்:06.07.2022

பொருள்:தீயணைப்பு-மீட்புப்பணித்துறை – விருகம்பாக்கம் தீயணைப்பு – மீட்புப்பணி நிலையம் - பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் வழங்கிட தடையின்மைச் சான்று வழங்குதல் - குறித்து.

பார்வை:1.அரசு ஆணை எண்.122, பள்ளி கல்வி (2) துறை, நாள்.14.09.2004.

2.அரசு ஆணை எண்.123, பள்ளி கல்வி (2) துறை, நாள்.14.09.2004.

3. RAVINDRA BHARATHI GLOBAL SCHOOL - Principal என்பவரிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பம் நாள். 02.07.2022.

----------

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் விண்ணபத்தின்படி கதவு இலக்கம் எண் MUGALIVAKKAM MAIN ROAD, MADHANANDHAPURAM, PORUR, CHENNAI – 600 125. என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள M/S RAVINDRA BHARATHI GLOBAL SCHOOL என்ற பள்ளியினை 04.07.2022 அன்று விருகம்பாக்கம் நிலைய அலுவலர் திரு.ப.பாலச்சந்திரன் என்பவரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்விடத்தில் பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் வழங்கிட கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நோக்கிலிருந்து யாதொரு தடையும் இல்லை.

## நிபந்தனைகள்

1. இத்தடையின்மைச்சான்று ஓராண்டுக்கு மட்டுமே செல்லத்தக்கதாகும்.
2. போதுமானதீயணைப்பு கருவிகள் IS 2190:2010-ன்படி பொருத்தப்படவேண்டும். இந்திய தரநிர்ணய சான்றுடன் தீயணைப்பான்களை கண்ணுக்கு முதன்மையாக கவரும் வகையில் பள்ளியின் ஒவ்வொரு பகுதியிலும் நிறுவ வேண்டும்.
3. முதலுதவி சாதனங்கள் உரிய மருந்துகளுடன் உடனடியாக கிடைக்கும் வகையில் பள்ளிகளில் வைக்கப்படவேண்டும்.
4. **எல்.கே.ஜி. முதல் 3 வகுப்புகள் வரை வகுப்பறைகள் தரைத் தளத்தில் மட்டுமே நடைபெற வேண்டும்.**
5. தலைமை ஆசிரியர் மற்றும் இரண்டு ஆசிரியர்கள், பணியாளர்கள் மற்றும் ஒரு தீத்தடுப்பு அதிகாரி இவர்களை கொண்ட தீதடுப்புக்குழு பள்ளியில் அமைக்கப்பட வேண்டும். தீ பாதுகாப்பு திட்டம் ஒன்றை வகுத்து மூன்று மாதங்களுக்கு ஒருமுறை அந்த திட்டத்தை ஆய்வு செய்ய வேண்டும்.
6. அவசர காலத்தில் பயன்படுத்த கூடிய தொலைபேசி எண்கள் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர்களின் பட்டியல் ஒன்றை பள்ளியின் அறிவிப்பு பலகையில் ஒட்டுவதுடன் கேந்திரமான அனைத்து பகுதிகளிலும் தெளிவாக தெரியும் வகையில் அமைக்க வேண்டும்.
7. மாதிரி பயிற்சிகள் ஒழுங்கு முறையுடன் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் நடத்தப்பட வேண்டும். தீ மணி அனைத்து தளங்களிலும் நிறுவப்படவேண்டும். அது அனைவருக்கும் புரியும் வகையில் செயல்படுத்தப்படவேண்டும்.
8. பழைய மின்கம்பிகள் மற்றும் சாதனங்களை அகற்றப்பட்டு இந்திய தரநிர்ணய சான்றுடன் புதிய மின்அமைப்புகள் நிறுவப்படவேண்டும்.
9. அதிக மின்அழுத்தம் கொண்ட மின்கம்பிகள் பள்ளியின் உள்ளோ, அதன் அருகாமையிலோ செல்ல கூடாது. எவையேனும் இருப்பின் அவைகளை உடனடியாக அப்புறப்படுத்தப்படவேண்டும்.

10. ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு பாதுகாப்பு சாதனங்களை இயக்குதல், அவசர காலங்களில் வெளியேற்றும் முறைகள், தீ விபத்து அல்லது மற்ற நெருக்கடியான சமயங்களில் மாணவர்களை காப்பாற்றுவது குறித்து பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
11. தீயணைப்பு மற்றும் மீட்புப்பணித்துறையின் ஆலோசனை மற்றும் ஒப்புதலுடன் அவசரகால மீட்புப்பணி திட்டம் ஒன்றை வகுக்க வேண்டும். மேலும் பள்ளியில் பாதுகாப்பு ஆலோசனை குழு ஒன்று அமைக்கப்படவேண்டும்.
12. நெருக்கடி அமைப்புகளில் எவ்வாறு செயல்படுவது என்பது குறித்து மாதிரி பயிற்சிகள் குறிப்பிட்ட இடைவெளியில் பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்கள் பயன்பெறும் வகையில் நடத்தப்படவேண்டும்.
13. **ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 14-ம் தேதியை தீ பாதுகாப்பு நாளாக ஒவ்வொரு பள்ளியிலும் அனுசரிக்கப்பட்டு அன்றைய தினம் தீ விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் தீ பாதுகாப்பு பயிற்சிகளை தீயணைப்பு-மீட்புப்பணி குழுவினருடன் இணைந்து நடத்த வேண்டும்.**
14. அனைத்து பள்ளி கட்டிடங்களிலும் தீ மற்றும் இயற்கை பேரழிவுகளுக்கு எதிராக மாணவர்கள் உள்ளடக்கி தொகுப்பு ஈட்டுறுதி திட்டம் செயல்படுத்தப்படவேண்டும்.
15. தரைகீழ் தளத்தில் (Basements) வகுப்புகள், ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள் மற்றும் ஒன்றுகூடுமிடம் (Assembly Hall) அமைத்திட தடைசெய்யப்படுகிறது.
16. அனைத்து தளங்களிலும் அவசரகாலங்களில் விரைவாக வெளியேறும் வகையில் அவசரகால வழி அமைத்திட வேண்டும்.
17. 45 மாணவர்களுக்கு மேல் உள்ள வகுப்பறைகளுக்கு குறைந்தபட்சம் இருவழி கதவுகள் அமைக்கப் படவேண்டும்.
18. அனைத்து கதவுகளும் வெளிப்புறமாக திறக்கும் வகையில் அமைக்கப்படவேண்டும்.
19. கேஸ் பைப் லைன் படிக்கட்டுகள் ஒட்டி அமைக்கக் கூடாது.
20. படிக்கட்டுகளின் அகலம் குறைந்தப்பட்சம் 30 cm, உயரம் 15cm இருக்க வேண்டும்.
21. மாடிப்படிகள் மற்றும் வெளியேறும் வழிகளில் உள்ள விளக்குகள் தனிமின்சுற்றுடன் அமைக்கப்படவேண்டும்.
22. Miniature Circuit Breakers/Earth Leakage Circuit Breakers நிறுவப்படவேண்டும்.
23. உரிய பாதுகாப்பு முறையுடன் கட்டிடத்தில் இடிதாங்கி நிறுவப்படவேண்டும்.
24. School Safety policy-2016(National Disaster Management Authority Guidelines -படி ஒன்றுக்கு மேற்பட்ட தளங்கள் உள்ள கட்டிடங்களுக்கு Hose Reel System பொருத்தப்படவேண்டும்.
25. பள்ளியின் மூன்றாம் தளம் மாணவர்களின் பயன்பாட்டிலிருந்து முற்றிலும் நீக்கப்படவேண்டும்.

**அரசு விதிமீறல்கள் மற்றும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனில் வழங்கப்பட்ட தடையின்மைச்சான்று தானாக ரத்தாகிவிடும் என தெரிவிக்கப்படுகிறது.**

நி.நி.அ. தீயணைப்பு மீட்பு பணிகள் நிலையம் சென்னை-89 விருகம்பாக்கம்
06/07/22

06/07/2

**நிலைய அலுவலர்**
**தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலையம்**
**இராமாபுரம், விருகம்பாக்கம்**
**சென்னை - 600 089.**

பெறுநர்:

M/S RAVINDRA BHARATHI GLOBAL SCHOOL
MUGALIVAKKAM MAIN ROAD,
MADHANANDHAPURAM, PORUR, CHENNAI – 600 125.

நகல்: மாவட்ட அலுவலர், மத்தியசென்னை மாவட்டம்.